சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 23.07.2026 OP 195/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரம்யா | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | ம.சா.1 | | | |

---------------------------------------------------------------

முதல் விசாரணை

நான் மனுவின் மனுதாரர். மனுதாரர் தரப்பில் முதல் சாட்சியாவேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன்.

1. திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ 1

2. புகைப்படம் ம.சாஆ 2

3. எனது ஆதார் அட்டை ம.சா-ஆ 3.

4.எனது மகள் மெகன்சியின் பிறப்பு சான்றிதழ் மசாஆ 4.

**குறுக்கு விசாரணை**

நான் நகை பொருட்களை பெற்றுக்கொண்டேன் எங்களுக்குள் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது. எனது மகள் மெகன்சி என்னுடைய பராமரிப்பில் தான் இருந்து வருகிறார். நாங்கள் கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறோம். எனக்கு ஆயுட்கால ஜீவனாம்சம் தேவையில்லை. என் கணவர் மீது நான் என் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்கி கொள்வதால் என் கணவர் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றால் சரிதான். என் மகளை ஒவ்வொரு மாதமும் நீதிமன்ற பணி நாளான முதல் சனிக்கிழமை உத்தமபாளையம் இலவச சட்ட உதவி மையத்திற்கு அழைத்து வந்து காலை 10 முதல் 12 மணி வரை என் கணவர் என் மகளை பார்ப்பதற்கு சம்மதிக்கிறேன்.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.23 17:35:57 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 23.07.2026 OP 195/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வ கணபதி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | எ.ம.சா.1 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் மனுவின் எதிர்மனுதாரர். எதிர்மனுதாரர் தரப்பில் முதல் சாட்சியாவேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன்.

1. என்னுடைய ஆதார் அட்டை எமசாஆ 1.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் நகை பொருட்களை என் மனைவியிடம் கொடுத்து அவர் பெற்றுக்கொண்டார். எங்களுக்குள் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது. எனது மகள் மெகன்சி என் மனைவியின் பராமரிப்பில் இருப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. நாங்கள் கடந்த 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்கிறோம். என் மீது மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை என் மனைவி வாபஸ் வாங்கி கொள்வதால் நான் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன். என் மகளை மட்டும் மாதம் ஒருமுறை பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.23 17:36:05 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்